RNI No: TNTAM/2023/88599

திரை மொழி
THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

திரை: 03	மொழி : 8	மார்ச் - 2026	பக்கம்: 8	விலை: ரூ.10
Volume : 03	Issue : 8	March - 2026	Page: 8	Price: Rs. 10



அண்மையில் நடைபெற்ற தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க தேர்தலில், மாபெரும் வெற்றி பெற்ற தலைவர் திரு. தமிழ் குமரன் அவர்கள் தலைமையில், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

2026-29 ஆம் ஆண்டிற்கான தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க தேர்தல்

தமிழ் சினிமாவில் நல்ல மாற்றங்கள் மலரும்

தலைவர் G.K.M.தமிழ் குமரன்



இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் துடிப்பான திரைத்துறைகளில் ஒன்றாகத் தமிழ் சினிமா திகழ்கிறது. பல ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை ஈட்டும் இத்துறை, உள்நாட்டு சந்தையைத் தாண்டி, உலகளாவிய புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் மாபெரும் வணிக வீச்சைக் கொண்டுள்ளது. இந்த மாபெரும் வணிகக் கட்டமைப்பின் மைய அச்சாகச் செயல்படுபவர்கள் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஆவர். ஒரு திரைப்படத்தின் ஆரம்பக் கட்ட சிந்தனை முதல், படப்பிடிப்பு, வெளியீடு மற்றும் விநியோகம் வரையிலான அனைத்து நிலைகளிலும் முழுமையான நிதி அபாயத்தை (Financial Risk) சுமப்பவர்கள் இவர்களே. இருப்பினும், வெளியுலகிற்குத் தெரியும் கவர்ச்சிக்கும் ஆடம்பரத்திற்கும் பின்னால், பெரும்பான்மையான தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களின் பொருளாதார நிலைமை மிகவும் சவாலானதாகவும், நிலையற்றதாகவும் இருக்கிறது. வளர்ந்து வரும் தயாரிப்புச் செலவுகள், திரையரங்க வெளியீட்டில் உள்ள சிக்கல்கள், மற்றும் டிஜிட்டல் தளங்களின் ஆதிக்கம் ஆகியவை தயாரிப்பாளர்களின் லாப வரம்பைக் கடுமையாகச் சுருக்கியுள்ளன.

இந்தச் சவாலான பொருளாதாரச் சூழலில், தயாரிப்பாளர்களின்

> பக்கம் 4ல் தொடரும்





ஆசீர்வதிக்கப்பட்ட கவிஞர் பிருந்தா சாரதி



எழுத்தாளர் ஜோ.டி.குரூஸ்

கவிஞரும், இயக்குநருமான பிருந்தா சாரதியின் 10வது கவிதை நூலான 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' வெளியீட்டு விழா, சென்னை மியூசிக் அகாடமியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஏற்கெனவே நடைவண்டி, ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம், பறவையின் நிழல், எண்ணும் எழுத்தும், இருளும் ஒளியும், முக்கோண மனிதன், மீன்கள் உறங்கும் குளம், பாஷோ என் பக்கத்து வீட்டுக்காரர், பச்சையம் என்பது பச்சை ரத்தம் ஆகிய 9 நூல்களை எழுதியுள்ள பிருந்தா சாரதியின் இந்த 10வது நூலை, இயக்குநர் என். லிங்குசாமி வெளியிட்டார். சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் ஜோ டி குரூஸ் மற்றும் தேசிய விருது பெற்ற இயக்குநர் வசந்தபாலன் ஆகியோர் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

டிஸ்கவரி புக் பேலஸ் மு. வேடியப்பன் வரவேற்புரையாற்ற, விழாவில் பல ஆளுமைகள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் முக்கிய உரைகள்:

பத்திரிகையாளர் மானா பாஸ்கரன் (தொடக்க உரை): "குமுதத்தில் பிருந்தா சாரதியின் படைப்புகளை நாங்களே கேட்டு வாங்கிப் பிரசுரித்தோம்; அவை பத்திரிகைக்கு வளம் சேர்த்தன. ஜெயகாந்தன் சொல்வது போல, நல்ல புத்தகங்களுக்குச் சிறகுகள் உண்டு. அந்த வகையில் இந்தப் புத்தகமும் பலரையும் சென்றடையும்."



இயக்குநர் லிங்குசாமி: "கல்லூரிக் காலத்திலேயே கரிச்சான் குஞ்சு, எம்.வி. வெங்கட்ராம் போன்ற மூத்த எழுத்தாளர்களோடு உரையாடும் அளவுக்குத் தன் வாசிப்பை வளர்த்துக் கொண்டவர் பிருந்தா. சினிமாவில் பெரும் பதற்றங்களுக்கு மத்தியிலும் நிதானமாக இருப்பவர். 'தாஜ்மஹால் கூட ஒவ்வொரு செங்கல்லாகக் கட்டப்பட்டதுதான்' என்று எனக்குப் பலமுறை ஆறுதல் தந்திருக்கிறார்."

எழுத்தாளர் ஜோ.டி.குரூஸ்: "பாலைவனத்தில் எரியும் மரத்திலிருந்து மோசேக்குக் கேட்ட குரல் போல, சமூகத்தின் பேரிரைச்சல்களுக்கு மத்தியிலும் ஆசீர்வதிக்கப்பட்ட வர்களின் குரல் படைப்புகளாக ஒலித்துக் கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவராகவே பிருந்தா சாரதியை நான் பார்க்கிறேன்."

இயக்குநர் வசந்தபாலன்: "சினிமா உலகில் ரத்த அழுத்தம், மன அழுத்தம் இல்லாமல் இயங்கும் அபூர்வ மனிதர் பிருந்தாதான். கடந்த 30 ஆண்டுகளாக அவரைப் பார்த்து வருகிறேன். எதைப் பற்றியும் பதற்றப்படாமல், தன் கவிதைகளை எந்தச் சுயபுலம்பலும் இன்றித் தொடர்ந்து பற்றிக்கொண்டு நிற்கிறார்."

முன்னாள் ஐ.நா. அதிகாரி இரா. கண்ணன்: "பிருந்தா சாரதிக்குக் கலைமாமணியும், சாகித்ய அகாடமியும் பெருமை சேர்க்கும். அதையும் தாண்டி, அவரது கவிதைகள் மக்கள் மனதில் அமரத்துவம் பெற வேண்டும்."

ஊடகவியலாளர் கார்த்திகேயன் (புதிய தலைமுறை): "இந்தக் கவிதை நூலில் பெண்ணியம் சார்ந்த பல ஆழமான கருத்துகள் இடம் பெற்றுள்ளன. மனிதர்களுக்கு வீடு, அலுவலகம் தாண்டிய 'மூன்றாம் இடம்' (Third space) மிகவும் அவசியம்; அதை நோக்கிய நகர்வை இவரது கவிதைகள் வலியுறுத்துகின்றன."



கவிஞர் / இயக்குநர் பிருந்தாசாரதி

கவிஞர் ஏர்வாடி ராதாகிருஷ்ணன்: "சிறந்த ரசிகனாக இருப்பவனால்தான் நல்ல கவிஞராக முடியும் என்பதற்கு பிருந்தாவே சிறந்த உதாரணம்."

பொறியாளர் கோ. லீலா & மொழிபெயர்ப்பாளர் பிரேமா ரவிச்சந்திரன்: செயற்கை நுண்ணறிவு காலத்தில், மனித உணர்வுகளை உயிருடன் கடத்தும் கவிதைகளை பிருந்தா தந்துள்ளார் எனப் பாராட்டினர்.

ஜின்னா அஸ்மி (படைப்புக் குழுமம்): "கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களால் எங்களுக்குப் பரிந்துரைக் கப்பட்டவர் பிருந்தா சாரதி. அவரது இலக்கிய மற்றும் எதிர்காலத் திரைப்பயணம் சிறக்க வாழ்த்துகள்."

ஏற்புரை:

விழாவின் நிறைவாக ஏற்புரை யாற்றிய கவிஞர் பிருந்தா சாரதி, "நெருக்கடியான காலகட்டத்திலும் இலக்கியத்திற்காக இவ்வளவு பேர் திரண்டு வந்திருப்பது நெகிழ்ச்சியாக உள்ளது. இங்கு வந்திருக்கும் ஒவ்வொருவரின் பாதங்களையும் முத்தமிடுகிறேன்" எனக் கூறி, விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த விஷ்ணு அசோசியேட்ஸ் ஆர். சிவக்குமார் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



இயக்குநர் வசந்தபாலன்



இயக்குநர் லிங்குசாமி

‘நானும் ஹைக்கூவும்’ - இயக்குநர் சரண்

சென்னையில் மாதந்தோறும் நிகழ்ந்துவரும் ‘ஹைக்கூ முற்றம்’ 8 ஆவது நிகழ்வு கோயம்பேடு எதிரேயுள்ள விக்டோரியா கார்டன் மகாகவி ஈரோடு தமிழன்பன் அரங்கில் கடந்த பிப்ரவரி 25 அன்று நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இயக்குநரும் கவிஞருமான சரண், “படைப்பு ஒன்றை எழுதி முடித்தபின் படைப்பாளன் அதைப் பற்றிய விமர்சனங்களைப் பொருட்படுத்த அவசியமில்லை” என்று தனது அனுபவப் பகிர்வில் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு எழுத்தாளர் சந்துரு மாணிக்கவாசகம் தலைமையேற்றார். கவிஞர் மு.முருகேஷ் அனைவரையும் வரவேற்றார்.

இயக்குநர், கவிஞர் சரண் எழுதிய ‘நீர் மேல் எழுத்துகள்’ ஹைக்கூ கவிதை நூலை கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப. சொக்கலிங்கம் திறனாய்வு செய்து உரையாற்றினார்.

நிகழ்வில் பங்கேற்ற இயக்குநரும் கவிஞருமான என்.லிங்குசாமி, “நண்பர் சரண் மிகப்பெரிய இயக்குநர். அஜித் போன்ற நடிகர்களை வெற்றிகரமான வணிக ஹீரோவாக நிலைநிறுத்தியவர். படப்பிடிப்பின் தளத்தில் வைத்து அவ்வப்போது வசனங்களை எழுதி, வெற்றிப்படங்களைத் தொடர்ந்து இயக்கிய திறமை படைத்தவர்.

குருநாதர் எஸ்.பாலச்சந்தர் போன்ற மிகப்பெரிய ஆளுமையின் பட்டறையில் இருந்து வந்ததால் மிகப் பெரிய திறமை வாய்ந்தவர் எப்படி இருப்பார்? “ஹைக்கூவிற்கு அறை எடுத்து அமர்ந்து யோசிக்கக்கூடாது. அது தானாக நிகழ வேண்டும்”என்றார் அப்துல் ரகுமான். பாஷோ போன்ற முன்னோடிகள் இயல்பான ஹைக்கூ அனுபவங்களுக்காக நிறையப் பயணங்களை மேற்கொண்டார்கள்.

ஹைக்கூவிற்காகப் பாஷோ பயணம் மேற்கொண்ட இடங்கள் இன்று ஜப்பானின் வரலாற்றுச் சின்னங்களாக, சுற்றுலாத்தளங்களாக மாறிவிட்டன.

ஹைக்கூவிற்காகப் பாஷோ பயணம் மேற்கொண்ட இடங்கள் இன்று ஜப்பானின் வரலாற்றுச் சின்னங்களாக, சுற்றுலாத்தளங்களாக மாறிவிட்டன.

இயக்குநர் சரண் புதிதாக ஒரு தளத்தில் பயணிக்கிறார். ஆனால், அதில் ஆகச்சிறந்த முனைப்போடு எப்படி செயல்படுகிறார் என்று எனக்கு வியப்பாக இருக்கும். அதன்பிறகு, அவரின் படைப்புக்களைத் தொகுப்பாகக் கொண்டுவர வேண்டும்



என்று வலியுறுத்தினேன். திரைத்துறையில் சரண் எங்களுக்கெல்லாம் முன்னோடி. பிரமிப்பூட்டும் மிகப்பெரிய ஆளுமைகளோடு பணி செய்தவர். அன்றுமுதலே அவருடைய தோற்றம், பேச்சு, திரைக்காட்சி அமைப்பு எல்லாமே மிகவும் நாகரீகமான தரத்தில் இருக்கும். அவரின் உருவாக்கங்கள் உண்மையான கலைமுயற்சியின் நுட்பம் கொண்டவை. இத்தகு சிறப்புமிக்க படைப்பாளி எங்களோடு இணைந்து ஹைக்கூவில் பயணிப்பது மகிழ்ச்சியளிக்கிறது” என்று வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.

‘நானும் ஹைக்கூவும்...’ எனும் தலைப்பில் இயக்குநர், சரண் பேசும்போது, “நான் சிறுவனாக இருந்தபோது எதிர்வீட்டில் இருந்த தாத்தா ஒருவர் என்னை வாரியணைத்துத் தூக்கிக்கொஞ்சுவார். நாங்கள் வீடு மாறியபோதும், அம்மாவோடு எங்காவது சந்திக்க நேரும் போதெல்லாம் என்னிடம் அத்தனை வாஞ்சையுடன் விசாரிப்பார். அவர் கைகளின் வழியாக எனக்கு இலக்கிய ஆர்வமும் கவிதையின் பால் ஈர்ப்பும் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். என்னுடைய ‘தாடித்தாத்தா’தான் புதுக்கவிதைகளின் முன்னோடியான பெரும் கவிஞர் ந.பிச்சமூர்த்தி என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு.

அம்மா என்னைச் சிறுவயதிலேயே நூலகத்திற்கு அழைத்துச்சென்று வாசிக்கப் பழக்கியிருந்தார். மூன்றாம் வகுப்புப் படிக்கும்போதே தனித்து வாசிக்கத் தொடங்கிவிட்டேன். கவிதைகளை வாசிப்பதும் எழுதுவதும் எனக்குப் பிடித்தமான செயலாக மாறியது.

இயக்குநர் சிகரம் பாலசந்தர், நான் வியந்துபார்த்து என்றும் ரசிக்கும் மனிதர். அவரிடம் பணியாற்றிய தருணம் அவருடைய எழுத்தையும், காட்சிகளையும் முதல் பார்வையாளனாக நான் ரசித்தது இன்றுவரை நான் பெருமைப்படுகிற விஷயம். ஒரு படம் இயக்கி முடிக்கும்வரை அதே சிந்தனையில், கதையில், காட்சியில் எண்ண ஓட்டத்தில் தவம் போன்று திரைப்படப் பணிகளை மேற்கொள்வேன். படம் முடிந்த பிறகு, அதனை அப்படியே தவிர்த்துவிடுவேன். இதுதான் என் தனித்துவம்.

நண்பர் லிங்குசாமியின் ஹைக்கூ உருவாகும் தருணங்களையும் முதலில் நான்தான் கேட்டு ரசிப்பவன் என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்வும் பெருமையும் உண்டு. ஹைக்கூ கவிதைப்போட்டி பற்றிச் சந்திக்கும் தருணங்களில் உடனிருந்த அனுபவத்தில் அவரின் ஹைக்கூவைக் கேட்டு வியந்திருக்கிறேன். அந்தத் தாக்கத்தில் நானும் சில ஹைக்கூ எழுதிக் காட்டியதும், சிலவற்றை சிலாகித்து அருமையாக இருப்பதாகப் பாராட்டுவார். கலைஞனுக்குப்

ஒரு படம் இயக்கி முடிக்கும்வரை அதே சிந்தனையில், கதையில், காட்சியில் எண்ண ஓட்டத்தில் தவம் போன்று திரைப்படப் பணிகளை மேற்கொள்வேன். -இயக்குநர் சரண்

பாராட்டுதலைவிட உற்சாகம் தருவது வேறென்ன இருக்க முடியும்?

படைப்பு ஒன்றை எழுதிய பின் படைப்பாளன் அதைப் பற்றிய விமர்சனங்களைப் பொருட்படுத்த அவசியமில்லை என்றே கருதுகிறேன். ஒருவருடைய கவிதையின் சாயல் வேறொருவர் படைப்பில் இருப்பது இயல்பு. அதை ஏற்றுக்கொள்வதுதான் பெருந்தன்மையாக இருக்கும்” என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கவிஞர்கள் ஜெயபாஸ்கரன், பிருந்தாசாரதி, என். குமார், சா.கா.பாரதிராஜா, சக்திமான் அசோகன், புதுகை ஆதீரா, அன்புத்தோழி ஜெயஸ்ரீ, அனுராதா செளரிராஜன், வ.ரகுநாத், பா.ஸ்ரீகுமார், விஞ்ஞானி மாசிலாமணி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



தலைவர் திரு.தமிழ் குமரன் அவர்கள் தலைமையில், புதியதாக பொறுப்பேற்றிருக்கும் நிர்வாகிகள், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு. தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

முதல் பக்க தொடர்ச்சி...

உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், அரசு மற்றும் பிற திரைத்துறை அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் உருவாக்கப்பட்ட முதன்மை அமைப்புதான் தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் (Tamil Film Producers Council TFPC) ஆகும். 1979 ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, கடந்த பல தசாப்தங்களாகத் திரைப்படத் துறையின் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களைக் கடந்து வந்துள்ளது. இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பிற்கு வருபவர்கள், ஒட்டுமொத்தத் திரைத்துறையின் வர்த்தகக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் அளவிற்கான அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளனர்.

அந்த வகையில், 2026 முதல் 2029 வரையிலான காலத்திற்கான புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத் தேர்தல், தமிழ் சினிமாவின் வரலாற்றில் ஒரு மிக முக்கியமான திருப்புமுனையாக அமைந்துள்ளது. கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நடைபெற்ற இத்தேர்தலில், "தமிழ் சினிமாவில் நல்ல மாற்றங்கள் மலரும்" என்ற வலுவான வாக்குறுதியுடன் களமிறங்கிய ஜி.கே.எம். தமிழ் குமரன் தலைமையிலான அணி பெற்ற வெற்றி சினிமா துறையில் பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது.

இத்தேர்தல் வெறும் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் சடங்காக மட்டுமில்லாமல், ஒட்டுமொத்தத் தயாரிப்பாளர் சமூகத்தின் எதிர்காலப் பொருளாதாரப் பாதுகாப்பைத் தீர்மானிக்கும் ஒரு கருவியாகவே பார்க்கப்பட்டது.

ஜி.கே.எம். தமிழ் குமரனின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி

வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள், தமிழ் சினிமா தயாரிப்பாளர்கள் மத்தியில் நிலவும் தெளிவான மனநிலையைப் பிரதிபலித்தன. இதில், நலம் காக்கும் அணி சார்பில் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட தயாரிப்பாளர் ஜி.கே.எம். தமிழ் குமரன் 788 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். இந்த வெற்றியானது சாதாரணமான ஒன்றல்ல; இதன் மூலம்

இத்தேர்தல் வெறும் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் சடங்காக மட்டுமில்லாமல், ஒட்டுமொத்தத் தயாரிப்பாளர் சமூகத்தின் எதிர்காலப் பொருளாதாரப் பாதுகாப்பைத் தீர்மானிக்கும் ஒரு கருவியாகவே பார்க்கப்பட்டது.

தயாரிப்பாளர் சங்கத் தேர்தல் வரலாற்றிலேயே தலைவர் பதவிக்கு போட்டியிட்டு அதிக வாக்குகள் பெற்றவர் என்ற தனிச்சிறப்பையும் அவர் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் எந்தவொரு தலைவரும் இவ்வளவு பெரிய வாக்கு வித்தியாசத்திலோ அல்லது இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான வாக்குகளையோ பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் சுயேட்சையாக களமிறங்கிய S. கதிரேசன் செயலாளராகவும், எதிரணியில் இருந்து M.அன்புதுரை செயற்குழு உறுப்பினராகவும், சுயேட்சையாக நின்ற K.பியாரிலால் குண்டச்சா ஆகியோரும் வெற்றி பெற்று கவனம் ஈர்த்தனர்.

ஜனநாயகத்தின் அவசியம் மற்றும் தயாரிப்பாளர்களின் நலன்: குஷ்பு சுந்தர்

தேர்தல் களத்தின் எண்களையும் தரவுகளையும் தாண்டி, இத்தேர்தல் உணர்த்தும் உளவியல் ரீதியான மற்றும் சமூக ரீதியான உண்மைகளை மூத்த திரைக்கலைஞர்களின் கருத்துகள் மூலம் புரிந்துகொள்ள முடியும். பிரபல நடிகையும், முன்னணித் தயாரிப்பாளருமான குஷ்பு சுந்தர், இத்தேர்தல் குறித்துப் பதிவு செய்த கருத்துகள் தமிழ் சினிமாவின் தற்போதைய யதார்த்த நிலையின் கண்ணாடியாக அமைந்தன.

கந்தசாமி நாயுடு கல்லூரியில் தனது வாக்கினைப் பதிவு செய்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த குஷ்பு, இந்தத் தேர்தல் ஒரு ஜனநாயக முறைப்படி நடைபெறுவதன் அவசியத்தை மிக ஆழமாக வலியுறுத்தினார். "தமிழ் சினிமாவில் தற்போதைய காலகட்டத்தில் பல தயாரிப்பாளர்கள் மிகுந்த சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டு வருகிறார்கள்".

குறிப்பாக, "ஓரவஞ்சனை" (Favoritism) இல்லாமல் புதிய நிர்வாகம் நேர்மையுடன் செயல்பட வேண்டும் என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். திரைத்துறையில் ரிலீஸ் தேதிகளை ஒதுக்குவது, திரையரங்குகளைப் பங்கிடுவது போன்ற விஷயங்களில் சில ஆதிக்கச் சக்திகளுக்கு மட்டுமே சாதகமாக நடந்துகொள்ளும் போக்கு காலங்காலமாக இருந்து வந்துள்ளது. இத்தகைய பாரபட்சமான நடைமுறைகளை முற்றிலுமாகக் களைந்து, சிறிய மற்றும் பெரிய தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கும் நேர்மையான நிர்வாகமே தற்போதைய அவசரத் தேவையாகும். உண்மையாகத் திரைத்துறைக்கு என்ன தேவையோ அதனைச் செய்தால் மட்டுமே தமிழ் சினிமா தழைத்தோங்கும் என்ற குஷ்புவின் கருத்து, நலம் காக்கும் அணியின் எதிர்காலச் செயல்பாடுகளுக்கான ஒரு தார்மீக வழிகாட்டுதலாக அமைந்துள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடனான சந்திப்பு

பதவியேற்ற சில நாட்களிலேயே தயாரிப்பாளர் சங்கத்தின் புதிய தலைவர் ஜி.கே.எம். தமிழ் குமரன் தலைமையிலான குழுவினர், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு

திரையரங்கக் காட்சி நேரக் குறைப்பு மற்றும் பொருளாதார விரிவாக்கம்	
தற்போதைய நடைமுறை மற்றும் சவால்கள்	30 நிமிட இடைவெளி கோரிக்கையின் பலன்கள்
ஒரு காட்சிக்கும் அடுத்த காட்சிக்குமான நீண்ட இடைவெளி.	இடைவெளி வெறும் 30 நிமிடங்களாகக் குறைப்பு.
ஒரு நாளைக்கு 4 காட்சிகள் மட்டுமே திரையிட முடியும்.	ஒரு நாளைக்கு 5 அல்லது 6 காட்சிகளைத் திரையிடும் வாய்ப்பு.
குறைவான காட்சிகளால் வெளியீட்டிற்குக் காத்திருக்கும் படங்களின் தேக்கம்.	கூடுதல் காட்சிகளால் அதிகப் படங்களுக்கு வெளியீட்டு வாய்ப்பு.
முதலீடு திரும்பப் பெற நீண்ட நாட்கள் ஆகுதல்.	முதல் வார இறுதியிலேயே அதிக வருவாய் பெற்று முதலீட்டை மீட்டெடுத்தல்.



தலைவர் திரு. தமிழ் குமரன் அவர்கள் தலைமையில், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்பு வெறும் மரியாதை நிமித்தமான சந்திப்பு அல்ல; இது தமிழ் சினிமாவின் எதிர்காலப் பொருளாதாரத் திட்டங்களை வரைவு செய்வதற்கான ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும்.

இந்தச் சந்திப்பிற்கு முந்தைய நாள், தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் நேரில் சந்தித்துத் தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திரைத்துறையின் நுணுக்கங்களை நன்கு அறிந்தவர்; அவரே ஒரு வெற்றிகரமான தயாரிப்பாளராகவும் விநியோகஸ்தராகவும் இருந்தவர். எனவே, திரைத்துறையின் பிரச்சனைகளையும், அதற்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளையும் அவர் முழுமையாகப் புரிந்து கொள்வார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தயாரிப்பாளர் சங்கத்தினரிடையே நிலவியது. அரசு இயந்திரத்திற்கும் திரைத்துறைக்குமான இடைவெளியைக் குறைப்பதில் இந்தச் சந்திப்பு பெரும் பாலமாக அமைந்தது.

உள்நிர்வாகச் சீர்திருத்தங்களும் மூத்த கலைஞர்களின் பார்வையும்

பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ள தயாரிப்பாளர்களைக் காக்க, புதிய நிர்வாகம் பல்வேறு உள்கட்டமைப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இது குறித்து மூத்த கலைஞர்களின் எதிர்பார்ப்புகளும் இதில் அடங்கும்.

முக்கிய நிர்வாக முன்னெடுப்புகள்:

- *நடிகர்களின் முன்பணப் பிரச்சனை:* முன்னணி நடிகர்களுக்கு வழங்கப்பட்டு, பல ஆண்டுகளாகத் திரும்பப் பெறப்படாமல் முடங்கிக் கிடக்கும் முன்பணங்களை *(Advances)* மீட்கவும், முறைப் படுத்தவும் ஒரு உயர்மட்டக் குழு *(High level Committee)* அமைக்கப்பட்டுள்ளது.
- *சங்கங்களின் ஒருங்கிணைப்பு:* பல கூறுகளாகப் பிரிந்து கிடக்கும் சிறு தயாரிப்பாளர் அமைப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, மீண்டும் "தாய் சங்கமான" தயாரிப்பாளர்கள் சங்கத்தின் கீழ் ஒன்றிணைப்பது குறித்து பணிகள் தொடங்கி உள்ளனர்.

எதிர்பார்க்கப்படும் பலன்கள்:

- *முதலீட்டுப் பாதுகாப்பு:* 30 நிமிட இடைவெளி மற்றும் கூடுதல் காட்சிகள் மூலமாகத் தயாரிப்பாளர்கள் தங்கள் முதலீட்டை முதல் வாரத்திலேயே திரும்பப் பெறும் வாய்ப்பு உருவாகும்.
- *பணப்புழக்கம் அதிகரிப்பு:* அரசின் நிலுவை மானியங்கள் கிடைப்பதன் மூலமாக, கடனில் சிக்கியுள்ள சிறு தயாரிப்பாளர்களின் சுமை குறைந்து, திரைத்துறையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.
- *ஒழுங்குமுறை:* நடிகர்களுக்கான முன்பணப் பட்டுவாடா முறைப் படுத்தப்படுவதால், வட்டிக்குக் கடன் வாங்கிப் படமெடுக்கும் தயாரிப்பாளர்களின் நிதிச் சுமை பெருமளவு குறையும்.
- *கூட்டு வலிமை:* அனைத்துச் சங்கங்களும் ஒன்றிணைந்து செயல்படுவதால், அரசு மற்றும் விநியோகஸ்தர்களிடம் தயாரிப்பாளர்களின் பேரம் பேசும் திறன் *(Collective Bargaining Power)* பல மடங்கு அதிகரிக்கும்.

ஒரு ஜனநாயகபூர்வமான, ஓரவஞ்சனையற்ற நேர்மையான நிர்வாகமே தற்போதைய தேவையாகும். அதனை நோக்கியே நலம் காக்கும் அணி தனது முதல் அடியை வலுவாக எடுத்து வைத்துள்ளது. அரசு இயந்திரத்தின் துணையோடு, உள்நிர்வாகச் சீர்திருத்தங்களை முழுமையாகச் செயல்படுத்தினால், தமிழ் சினிமா தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் இருண்ட காலம் முடிவுக்கு வந்து, பொருளாதாரச் செழிப்பும் கலை மேம்பாடும் கொண்ட ஒரு புதிய விடியல் மலரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்தப் புதிய நிர்வாகத்தின் கீழ், தமிழ் சினிமா தனது எல்லையை விரிவுபடுத்தி, உலக அரங்கில் பொருளாதார ரீதியாகவும், கலை ரீதியாகவும் ஒரு மாபெரும் வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளட்டும் என திரைமொழி மாத இதழ் மனதார வாழ்த்துகிறது.

-திரைமொழி ஆசிரியர் குழு

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம்
TAMIL FILM PRODUCERS COUNCIL

(Registered under Tamilnadu Societies Registration Act of 1975) Regn. No. 144/79

தலைவர்:	G.K.M. தமிழ்குமரன் B.E., M.B.A.,
துணைத் தலைவர்கள்:	S.கமலக்கண்ணன், R.K.சுரேஷ்
செயலாளர்கள்:	S.கதிரேசன், R.ராதாகிருஷ்ணன்
இணைச் செயலாளர்:	சுஜாதா விஜயகுமார்
பொருளாளர்:	N.சுபாஷ் சந்திர போஸ்

செயற்குழு உறுப்பினர்கள்

P.L.தேனப்பன்	B. மகேந்திரன்	H. முரளி	P.G. பாலாஜி
அழகன் தமிழ்மணி	V. ஞானவேல்	S. ஜோதி	S. ஜெயசீலன்
பைஜா டாம்	V. இசக்கி ராஜா	M. கபார்	K. முருகன்
சித்ரா லட்சுமணன்	R. மாதேஷ்	V.N. ரஞ்சித்குமார்	M. அன்புதுரை
A.ஏழுமலை	தன ஷண்முகமணி	K. பியாரிலால் குண்டாச்சா	V. பழனிவேல்
D.N. தாய் சரவணன்	G.M. டேவிட்ராஜ்	K. செந்தாமரைக்கண்ணன்	
A. முருகன்	சாலை சகாதேவன்	S.N. ராஜராஜன்	

'அக்காக்கள் வாழ்ந்த வீடு' - பாசத்தின் சாட்சியம்




கவிஞர் செந்தமிழ்சீனி

கவிதை என்பது வெறும் வார்த்தைகளின் கோர்வை அல்ல; அது காலத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் நினைவுகளின் ஈரம். அந்த ஈரத்தை, பாசத்தின் ஊற்றைக் கண்டெடுத்து, வாசகர்களின் நெஞ்சங்களில் பாய்ச்சிய ஒரு உன்னத நிகழ்வாக அமைந்தது கவிஞர் மற்றும் பாடலாசிரியர் செந்தமிழ்சீனி அவர்களின் "அக்காக்கள் வாழ்ந்த வீடு" கவிதை நூல் வெளியீட்டு விழா. டிஸ்கவரி புக் பேலஸ் வெளியீடாக வந்த இந்த நூல், சென்னை படைப்பு அரங்கில் நடைபெற்ற விழாவில் தமிழ் இலக்கிய மற்றும் திரைத்துறை ஆளுமைகளின் முன்னிலையில் கோலாகலமாக வெளியிடப்பட்டது.

அறிமுக உரை கவிஞர் ஜெயஸ்ரீ:

அக்காக்களின் அன்பு, தியாகம், மற்றும் அவர்கள் ஒரு தம்பியின் வாழ்வில் ஏற்படுத்தும் ஆழமான தாக்கம் குறித்துக் கவித்துவமாக எடுத்துரைத்தார். இந்த நூல், ஒவ்வொரு வாசகரையும் தனது சொந்த அக்காக்களின் நினைவுகளுக்குள் அழைத்துச் செல்லும் ஆற்றல் கொண்டது என்பதை அவர் தனது ஆழமான வாசிப்பின் மூலம் உணர்த்தினார்.

தலைமை உரை: மனுஷ்யபுத்திரன்

விழாவிற்குத் தலைமை தாங்கிய நவீனத் தமிழ்க் கவிதையின் ஆளுமை கவிஞர் மனுஷ்ய புத்திரன், செந்தமிழ்சீனியின் இந்த முயற்சியைக் கொண்டாடினார். மனுஷ்ய புத்திரனின் பிறந்தநாளை மேடையிலேயே கேக் வெட்டி ஒரு இன்ப அதிர்ச்சியாகக் கொண்டாடி, விழாவிற்கு மேலும் ஒரு உணர்வுப்பூர்வமான பரிமாணத்தைச் சேர்த்தனர். அவருக்கான செந்தமிழ்சீனி எழுதிய ஒரு பிரத்யோக பாடலையும் நிகழ்வில் ஒளிபரப்பப்பட்டது.

தனது தலைமை உரையில் மனுஷ்ய புத்திரன், "கவிதை என்பது காலத்தின் கண்ணாடியாக இருக்க வேண்டும். செந்தமிழ்சீனியிடம் வாழ்க்கையை ஊடுருவிப் பார்க்கக்கூடிய மிக ஆழமான கண்கள் உள்ளன," என்று பாராட்டினார். மேலும், "இலக்கியச் சூழலில் வெறுப்பும் வன்பமும் நிறைந்திருக்கும் இந்நாட்களில், தனக்குமுன்னும்பின்னும்எழுதுபவர்களை அங்கீகரித்து, கொண்டாடும் செந்தமிழ்சீனி போன்ற கவிஞர்கள் மிகக் குறைவு.

அக்கா முதல் முறை சேலை காட்டினாள்
அம்மாவின் சேலை என்பதால்
அவ்வளவு கச்சிதமாயில்லை
ஆனால்
அம்மாவாக கச்சிதமாக இருந்தாள்

என்பதிலேயே தெரிந்துவிடுகிறது அக்காளின் அன்பு அகம். இந்த அக்காக்கள் வாழ்ந்த வீடு ஒரு பெரிய கொண்டாட்ட தினமாக மாறியிருக்கிறது," என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். செந்தமிழ்சீனி ஒரு சிறந்த பாடலாசிரியராகத் திரைத்துறையில் மிகப்பெரிய உயரங்களை அடைய வேண்டும் என்றும் அவர் வாழ்த்தினார்.

இயக்குநர் பிருந்தா சாரதி :

"முதலிலேயே சொல்லி விடுகிறேன், 'அக்காக்கள் வாழ்ந்த வீடு' என்ற இந்த புத்தகத்தைப் படித்தபோது, எனக்கு என்ன தோன்றியது என்றால், இந்த புத்தகத்தை நான் எழுதவில்லையே என்ற வருத்தம் தான் தோன்றியது," என்று மனந்திறந்து ஒப்புக்கொண்டார். இரண்டு அக்காக்களோடு பிறந்த தானும், உறவுகள் குறித்து பல கவிதைகள் எழுதியிருந்தாலும், செந்தமிழ்சீனி அக்காக்களின் அன்பை மட்டுமே மையமாகக் கொண்டு 100 கவிதைகளை வடித்திருப்பது, தனக்கு ஒரு பொறாமை கலந்த வியப்பை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டார்.

திரைப்பாடல் ஆசிரியராக நா. முத்துக்குமார், கபிலனைப் போல நிறைய பாடல்கள் எழுதுகிற வாய்ப்பு இவருக்கு வரும். தொடர்ந்து கவிதைகளும் எழுதுங்கள்," என்று நம்பிக்கையுடன் கூறினார்.

இயக்குநர் மீரா கதிரவன்:

"அக்காக்கள் வாழ்ந்த வீடு" என்ற டைட்டில் என்னை ரொம்பப் பெரிய அளவில் ஈர்த்தது. ஏன்னா, நானுமே பிருந்தா சாரதி சார் சொன்ன மாதிரி, எனக்குமே இரண்டு அக்காக்கள்," என்று தன் பாசத்தை நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார். "என்னுடைய அக்கா, எங்களுடைய வீட்டின் மூத்த பிள்ளை, ஜன்னத் சபுரால் பேகம், அதன் பிறகு அண்ணன், அதன் பிறகு என்னுடைய இரண்டாவது அக்கா பீமா பேகம்," என்று தனது அக்காக்களின் பெயர்களை மேடையில் உச்சரித்தபோது, அவரது குரலில் பாசம் ததும்பியது.

அக்காளுக்கு பெரும்பாலும்
அம்மாவின் சாயல் தான் என்றாலும்
கோபப்படும் போதெல்லாம் வந்துவிட்டு போவார்
அப்பா

கவிஞர்களோட நிறைய பழக்கம் இருந்தாலும், இவரோட எனக்குப் பெரிய பழக்கம் இல்லை. ஆனா இந்த கவிதை நூல் மூலமா நான் அவரைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டேன். செந்தமிழ் நீங்க நிறைய பாடல்கள் எழுதுங்க என்று வாழ்த்தினார்.

திருமதி பேபி சாய்ராம் (சன் டிவி செய்தி வாசிப்பாளர்):

"அக்காக்களின் பாசத்தை இவ்வளவு ஆழமாகப் பதிவு செய்த ஒரு நூல் சமீப காலங்களில் வெளிவரவில்லை. ஒவ்வொரு அக்காவுக்கும் இந்த நூல் ஒரு பெரிய அங்கீகாரமாக இருக்கும்," என்று உணர்வுப்பூர்வமாகத் தெரிவித்தார்.

கவிஞர் மு. முருகேஷ்:

"செந்தமிழ்சீனியின் கவிதைகள் பொதுவான மற்றும் நவீனத் தளங்களில் வாசிப்பவர்களுக்குப் பிடித்தமானவையாக உள்ளன," என்று பாராட்டினார். எமனுடன் தம்பி உரையாடுவது போன்ற ஒரு கவிதையைச் சுட்டிக்காட்டி, "அக்காக்கள் தவறிய சோகத்தை நம் எல்லோரிடமும் விதைக்கக்கூடிய ஒரு நல்ல கவிதை," என்று நெகிழ்ந்து பேசினார்.

கவிஞர் பார்வதி மீரா :

நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றிய கவிஞர் பார்வதி மீரா, தனது தனித்துவமான குரலில் அக்காக்களின் பாசத்தை ராகமாக வடித்தார். திரைத்துறையிலும் இலக்கிய உலகிலும் இயங்கும் அவர், செந்தமிழ்சீனியின் கவிதைகளில் உள்ள உணர்வுப்பூர்வமான தன்மையை வெகுவாகப் பாராட்டினார்.

அக்காக்கள் வாழ்ந்த வீடு" என்ற தலைப்பிலேயே ஒரு பெண்ணின் பாசம் முழுமையாக உறைந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். அக்காக்களின் அன்பு, அது ஒரு தம்பியை எப்படிச் செதுக்குகிறது, அவனை ஒரு முழுமையான மனிதனாக எப்படி மாற்றுகிறது என்பதை அவர் தனது கவித்துவமான உரையில் விவரித்தார். அவரது கவிதைகள் தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

நியூஸ்7 கோபால கிருஷ்ணன் :

செய்திகளுக்கும் கவிதைக்கும் இடையே உள்ள தொடர்பைக் கவித்துவமாக விவரித்தார். செய்திகள் என்பது அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்வதாக இருந்தாலும், கவிதை என்பது காலத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் நினைவுகளையும் உணர்வுகளையும் கண்டெடுத்துப் பதிவு செய்யும் கலை என்று குறிப்பிட்டார். செய்திகளின் பரபரப்புக்கு நடுவே, பாசத்தின் ஈரத்தை உணரச்செய்த இந்த தலைப்பு, வாசகர்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்கும் என்று கூறினார்.

ஏற்புரை: கவிஞர் செந்தமிழ்சீனி

நூலாசிரியர் செந்தமிழ்சீனி தனது ஏற்புரையில், தனது வாழ்விலும் கவிதைப் பயணத்திலும் அக்காக்களின் தாக்கம் எந்த அளவிற்கு இருந்தது என்பதை விவரித்தார்.

"எனக்கு அக்காக்கள் மீது மிகப்பெரிய பிரியம் உண்டு. அவர்கள் மீது கொண்ட பாசத்தினால்தான் இந்த நூல் உருவானது. அவர்கள் எங்களை வளர்த்த விதம், எங்களைப் பேணிய விதம் எல்லாம் என் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது," என்று கூறினார்.

அக்கா மனம் கொண்டவர்கள் எல்லோரும் இந்த நூலுக்கு வந்து சிறப்பித்தது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

"அக்காக்கள் வாழ்ந்த வீடு" வெறும் கவிதை நூல் அல்ல; அது ஒரு குடும்பத்தின் ஆழமான பாசத்தின் சாட்சியம். அக்காக்களின் பேரன்பையும், தியாகத்தை யும் கொண்டாடும் இந்த நூல், தமிழ் இலக்கிய உலகில் ஒரு தனித்துவமான இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

PRGI No : TNTSM/2023/88599

திரைமொழியின் முப்பெரும் விழா !

தமிழ் மாத இதழ்

திரைமொழி மாத இதழின் மூன்றாம் ஆண்டு விழா !

திரைமொழி சமூக நல அறக்கட்டளை தொடக்க விழா

'பாஞ்சாலி' குறும்படம் & 'ஆனந்த வாழ்க்கை' திரைப்பட பாராட்டு விழா



நாள் : 29.03.2026
ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 3.00 PM - 8.30 PM

இடம் : டிஸ்கவரி புக் பேலஸ் அரங்கம்
முனுசாமி சாலை,
கே.கே.நகர்.
சென்னை-78.



திரைமொழி சமூக நல அறக்கட்டளை தொடக்க விழா

நிகழ்ச்சி நிரல்

இறை - குரு வணக்கம்

நேரம் : 4.30 PM - 6.00 PM

தவம் : பேரா. அ/நி. **மாலதி சுப்பிரமணியன்** அவர்கள்

வரவேற்புரை : திரு. **ஆர்.சுப்ரமணிய பாரதி** அவர்கள்
தலைவர் / நிறுவனர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை

முன்னிலை : இயக்குநர் திரு. **ஆர்.கே.செல்வமணி** அவர்கள்
தலைவர், FEFSI, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்

தலைமை : இயக்குநர் திரு. **ஆர்.வி.உதயகுமார்** அவர்கள்
பொதுச்செயலாளர், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்

அறக்கட்டளை செயல் விளக்க உரை : அருள்நிதி திரு. **Dr. K. குரு அரங்கதுரை** அவர்கள்
பொதுச்செயலாளர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை
நாமக்கல் சிவகுரு ஜோதிடர்
திரு. **மூர்த்தி நடராஜன்** அவர்கள்
பொருளாளர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை

வாழ்த்துரை :

திரு. **Dr. S. சேகர்** அவர்கள்
முதுநிலை பேராசிரியர்
பொதுச்செயலாளர், உலக சமுதாய சேவா சங்கம்

அருள்நிதி. திரு. **P. முருகானந்தம்** CEO அவர்கள்
அறிவுத்திருக்கோயில், ஆழியாறு

மருத்துவர் திரு. **யுவபாரத்** அவர்கள்
யுவா நேச்சர் கேர்

திரு. இசைக்கவிஞர் **சௌந்தர்யன்** அவர்கள்
இசையமைப்பாளர்

திரு **சத்யா. C** அவர்கள்
இசையமைப்பாளர்

திரு **S.J. ஜனனி** அவர்கள்
இசையமைப்பாளர்

திரு. **ஜீவா தங்கவேல்** அவர்கள்
திரைப்பட நடிகர்

அருள்நிதி. திரு. **ச. ஜெகநாதன்** அவர்கள்
துணைத்தலைவர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை

திரு. **கரு. ராதாகிருஷ்ணன்** அவர்கள்
துணைத்தலைவர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை
இணை இயக்குநர், ஊடகவியலாளர், நியூஸ் 7

திரு. **S. தனசேகரன்** (Speech Therapist), அவர்கள்
துணைத்தலைவர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை
செய்தி வாசல் மாத இதழ் நிறுவனர் / ஆசிரியர்

திரு. **அ.சா. ஜாஹிர் உசேன்** எம்.ஏ., பி.எட்.,
இணைச்செயலாளர், திரைமொழி சமூக நல அறக்கட்டளை
உதவித் தலைமை ஆசிரியர்,
செய்யது அம்மாள் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

திரு. **சு. சத்தியசீலன்**
செய்திப்பிரிவு, திரைமொழி சமூக நல அறக்கட்டளை
திரைப்பட இயக்குநர்

நன்றியுரை:
ஆடிட்டர் **சு. ஜஸ்வர்யா** அவர்கள்
சமூக செயற்பாட்டாளர்

சிறந்த அறக்கட்டளைக்கான திரைமொழி விருது

திரு. **சத்தியநாராயணன்** அவர்கள்
நிறுவனர், கற்பக விருட்சம் அறக்கட்டளை

திரு. **எ. மாரிசாமி** அவர்கள்
நிறுவனர், முதல் தலைமுறை அறக்கட்டளை

திரைமொழி மாத இதழின் மூன்றாம் ஆண்டு விழா

நிகழ்ச்சி நிரல் :

தமிழ்த்தாய் வாழ்த்து

நேரம் : 3.00 PM - 4.30 PM

வரவேற்புரை : திரு. **மூர்த்தி நடராஜன்** அவர்கள்
பொறுப்பாசிரியர், திரைமொழி மாத இதழ்

தலைமை : இயக்குநர் திரு. **S. எழில்** அவர்கள்
இணைச்செயலாளர், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்

சிறப்புரை : திரு. **ஆர்.சி. ஜெயந்தன்** அவர்கள்
இதழியலாளர், இந்து தமிழ் திசை நாளிதழ்

வாழ்த்துரை : திரு. **S. சரவணன்** அவர்கள்
மாநிலத் தலைவர், தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் நலச்சங்கம்

திரு. **சிவயோகி மௌரியன்** அவர்கள்
President Tamilnadu
All India Small News Paper's Association

திருமதி. **ஸ்ருதி ஹரிஹர சுப்பிரமணியம்** அவர்கள்
திரைப்பட இயக்குநர்

ஏற்புரை : திரு. **ஆர். சுப்ரமணிய பாரதி** அவர்கள்
ஆசிரியர் / நிறுவனர், திரைமொழி மாத இதழ்

நன்றியுரை : திரு. **M. வேடியப்பன்** அவர்கள்
நிறுவனர், டிஸ்கவரி புக் பேலஸ்

திரைமொழியின் பாராட்டு சான்றிதழ்

திரைமொழியின் எழுத்தாளர்கள் மற்றும் குழுவினர்களுக்கு வழங்கப்படும்

தொடர்புக்கு : 95661 53766 / 95000 74478

'பாஞ்சாலி' குறும்படம் & 'ஆனந்த வாழ்க்கை' திரைப்பட பாராட்டு விழா

பாஞ்சாலி

நேரம் : 6.15 PM - 7.15 PM

வரவேற்புரை : திரு. **அமர்கீத்** அவர்கள்
இசையமைப்பாளர்

சிறப்புரை : திரு. **த. ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள்
தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை

வாழ்த்துரை : திரு. **ராசி அழகப்பன்** அவர்கள்
திரைப்பட இயக்குநர்

திரு. **ஜீவானந்தம்** அவர்கள்
திரைப்பட தயாரிப்பாளர்

ஏற்புரை : திரு. **ஆர். சுப்ரமணிய பாரதி**
திரைப்பட இயக்குநர்

நன்றியுரை : திரு. N. **கலையரசன்** (CPM) அவர்கள்
எழுத்தாளர்

ஆனந்த வாழ்க்கை

நேரம் : 7.30 PM - 8.30 PM

வரவேற்புரை : திருமதி. **ஜெயந்தி தியாகராஜன்** அவர்கள்
திரைப்பட நடிகை

சிறப்புரை : திரு. **முத்துசாமி IPS** அவர்கள்
IG (Rtd.,)

வாழ்த்துரை : திரு. **பிருந்தாசாரதி** அவர்கள்
திரைப்பட இயக்குநர் / எழுத்தாளர்

அருள்நிதி. திரு. **T.N. வேதகுமரச்செல்வன்**
மக்கள் தொடர்பு அலுவலர், அறிவுத்திருக்கோயில், ஆழியாறு

நன்றியுரை : அருள்நிதி **உமாராணி** அவர்கள்
சமூக செயற்பாட்டாளர்

சிற்றுண்டி 8.30 PM - 9.30 PM

பெண்ணின் காப்பு

மாதரைப் பேணுதல்
மேதகு பொறுப்பு
மதிப்போம் யாவரும்
மேதினில் சிறப்பு
வேதனை கொடுப்பதை
வேள்வியில் எரித்தால்
வேந்தரின் வீரன்
அவளிடம் பிறக்கும்...

சூழும் சமூகம்
சுதந்திரம் கொடுத்தால்
ஆளும் திறமை
ஆலாய் வளரும்
நீளும் வாழ்க்கை
சிறப்புற அமையும்
நாளும் நலமென
நங்கையை காத்திட...

பெண்ணின் காப்பு
ஆணின் கடமை
மண்ணில் பிறந்த
மானுடன் நினைத்தால்
கன்னியும் இங்கு
கண்ணியம் பெறுவாள்
கண்ணீர் கடந்து
காரியம் புரிவாள்...

அச்சம் தவிர்த்து
அடியும் வைக்க
உச்சி நிலவும்
உற்றுப் பார்க்க
இச்சை எதுவும்
இதயம் மறுக்க
இயைந்து நடந்தே
நம்பிக்கை கொடுப்போம்...

ஆணின் வர்க்கம்
அனைத்தும் பொறுப்பு
ஆதிரை அவளைக்
காத்திடில் சிறப்பு
காணும் கண்ணில்
கருணை சொரிய
ஆணின் மனதில்
தாய்மை மலரும்



கவிஞர் ஜெ. பார்வதி
கணித பட்டதாரி ஆசிரியை
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கீழ்முட்டுக்கூர், கீ.வ.குப்பம் ஒன்றியம்
வேலூர் மாவட்டம்.



தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின்
முதல் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட சங்க தலைவர்,
செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்.

“நிமாய்கோஷ்” விருது பெற்ற இயக்குநர்கள்



தென்னிந்தியத் திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் (FEFSI) சார்பில் நடைபெற்ற ஒருமைப்பாடு தின விழாவில், திரைத்துறையில் நீண்டகாலம் சேவையாற்றிய ஆளுமைகளுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான “நிமாய்கோஷ்” விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டது.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் சார்பாக, திரையுலகின் முன்னோடியும், சாதனையாளருமான எழுத்தாளர், இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் திரு. V.C. குகநாதன் அவர்களுக்கு இந்த உயரிய விருது வழங்கப்பட்டது. பல்வேறு சங்கங்களின் தலை வராகவும், திரைத்துறையின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகவும் விளங்கும் அவரது வாழ்நாள் சாதனையைப் பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டது.

அதேபோல், தென்னிந்தியத் திரைப்பட எழுத்தாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவரும், பிரபல எழுத்தாளர், இயக்குநர் மற்றும் நடிகருமான திரு. ரவிமரியா அவர்களுக்கும் “நிமாய்கோஷ்” விருது வழங்கப்பட்டது. திரைத்துறையில் தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன், சங்கப் பணிகளிலும், தொழிலாளர் நலன்களிலும் அக்கறையோடு செயலாற்றி வருவதைப் பாராட்டி அவர் கௌரவிக்கப்பட்டார்.

FEFSI மற்றும் இயக்குநர் சங்கத்தின் தலைவர் R.K. செல்வமணி அவர்கள், இருவருக்கும் பெருமைக்குரிய “நிமாய்கோஷ்” விருதினை வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில் திரைத்துறையைச் சேர்ந்த பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டு விருது பெற்றவர் களுக்குத் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு அரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
Website: Thiraimozhi.com
Email : info@thiraimozhi.com
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**